03.10.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒஸ்.எண். 119/2019)திரு.கருப்பசாமி.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> –

அழகம்மாள்,அய்யாச்சாமி வீடு எனது வீட்டிற்கு எந்த பக்கத்தில்ா உள்ளது என்றால் அய்யாச்சாமி வீடு எனது வீட்டிற்கு வடக்கு பக்கமும், அழகம்மாள் வீடு எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ளது. மங்கலச்சாமிவீடு எங்கு உள்ளது என்றால் எனது வீட்டிற்கு தெற்கே உள்ளது.1 ம்தபசில் வீட்டிற்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. மொத்தம் 4 செண்டு 1 3/4 செண்டுக்குத்தான் பட்டா கொடுத்துள்ளார்கள்.1,2 தபசில் சொத்துக்கள் புறம்போக்கு இடம் என்றால் சரிதான். 1 ம்தபசில் சொத்திற்கு பட்டா உள்ளதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவது போன்று 1 ம்தபசில் சொத்திற்குரிய பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1996 ல் எனது தகப்பனார் ஊர்காவலன் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.513/2 ஹெச்1 ஏ 1 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.பழைய சர்வே எண்.புதிய சர்வே எண்.850/4 என்றால் சரிதான். அதில் 71 சதுரமீட்டர் அளவுக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தீர்வை ரசீதுகளில் சர்வே எண் எங்கும் குறிப்பிடப்படவில்லை வீட்டு எண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 வது தபசில் என்பது வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்ட வீடு கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் குறிப்பிட்டுள்ள அளவைவிட அதிகமான அளவை காண்பித்து பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் 1 வது தபசில் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் சர்க்கார் புறம்போக்கு நிலத்தை நான் வளைந்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால்

நான் கண் கண்ணாடி போடததால் என்னால் படிக்க இயலவில்லை. சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் நான் இடம் வளைந்து காலிமனையாக நான் அனுபவித்துக் கொண்டு என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சுடலைமாடன் அனுபவம் செய்து அதன் பின்னிட்டு நான் அனுபவம் செய்து வருவதாக வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சுடலைமாடன் மனைவி பேச்சியம்மாள் அனுபவம் செய்து வந்து அதன்பின்னிட்டு நான் அனுபவம் செய்து வருகிறேன். வா.சா.ஆ.2 ல் 3 செண்டு நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் எத்தனை செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் 4 செண்டுக்கு மேல் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் தாவா 2 வது தபசில் சொத்திற்குரிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. வேறு எங்கோ உள்ள வீட்டு தீர்வை ரசீதை இந்த வழக்கில் தாவா 1 வது தபசில் வீட்டிற்குரிய ரசீதாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 வது தபசிலை அனுபவம் செய்து வருவதை காட்டக்கூடிய பட்டா,தீர்வை ரசீது போன்ற ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பத்திரம், வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். அனுபவச்சான்று பெற்று அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 தபசில் சொத்திற்கு பதிவு செய்துள்ளதாக சொல்லுவது அரசு புறம்போக்கு நிலத்தை பதிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. ஸ்தலத்தில் நான் சொல்லுவது போன்று தபசில் சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வெவ்வேறு இடங்களுக்குரிய ஆவணமான தபசில் 1,2 தபசில் சொத்துக்களுக்குரிய ஆவணமாக வா.சா.ஆ.1,.2 ஆக தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வள்ளிமுத்து மகன் உடையாருக்கு அங்கு இடம்உண்டா என்றால்இல்லை அவர்களுக்கு சம்பந்தம் கிடையாது. 2 வது தபசில் சொத்தினை உடையார் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 25.12.1998 அன்று

பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதிலிருந்து தற்போது வரை பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 வது தபசில் சொத்தின் மொத்த அளவு 6.35 செண்டு என்றும் அதுபற்றி தெரியாமல் தான் 3 செண்டு மற்றும் 1 செண்டு என்று போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா இடத்தை சரியாக அளந்து சரியான அளவு மற்றும் மால்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் சர்வேயர் வைத்து அளக்காமல் நாங்களாகவே அளந்து தாக்கல் செய்துள்ளோம். அதற்கு முன்பு அந்த இடத்தின் அளவுகள் தெரியாது என்றால் சரிதான். 2 வது தபசிலில் உள்ள சுற்றுச்சுவர் உடையார் தான் கட்டினார் என்றால் தவறு நான்தான் கட்டினேன். நான் குடியிருக்கும் வீடும்,சுற்றுச்சுவரும் இணைந்த சுவரா என்றால் ஆமாம். அதனை இடித்ததால் தான் பிரச்சனை. அதற்கு அருகில் அரசு சுகாதார மய்யம் உள்ளதா என்றால் ஆமாம். அதற்கு அடுத்து நெடுஞ்சாலைக்குப் பாத்தியப்பட்ட இடம் உள்ளதா என்றால் ஆமாம். சுந்தரலிங்கனார் பூங்கா உள்ளதா என்றால் உள்ளது. சுகாதார மய்யத்திற்கும் வடக்கு பக்கம்உள்ளது. அது அரசு நிலம் என்பதால் 2 வது தபசில் இடம் யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை அரசு அதிகாரிகளை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். 1,2 தபசில் சொத்துக்கள் எனக்குப்பாத்தியப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் அனுபவத்தில் தான் 1998 முதல் இருந்து வருகிறது என்றும் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டுமென்று இந்த வழக்கை பொய்யாக தாக்ல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில்விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளைக்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கிற்கும் எனக்கும்

எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னை இடைஞ்சல் செய்ததாக 11.06.2019ம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது உண்மையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3–ல் புகார் ரசீதில் 28.06.2019 போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.06.2019ம்தேதி பிரச்சனை நடை பெற்றதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காவல்நிலைய எழுத்தர் பிரதிவாதிக்கு சொந்தக்காரர்த என்பதால் எனது மனுவை வாங்கிவிட்டு இல்லை என்று சொன்னதன் பேரில் நான் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் சென்று மீண்டும் 28.06.2019ம்தேதி புகார் மனு எழுதி வாங்கிக்கொண்டார்கள். 11.06.2019 மற்றும் துணை கண்காணிப்பாளரிடம் புகார் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழியாகத்தான் சொன்னேன். நான் சொல்லுவது போல் 11.06.2019ம் தேதியிட்டு பிரதிவாதிகள் சுவலை இடித்து சொந்தரவு செய்ததாக ஒரு சம்பவம் நடை பெறவில்லை என்பதால் தால் தான் 28.,06.2019 மீண்டும் மனுக்கொடுத்து நான் சொல்லுவது போல் தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் எதிர்வாதியின் உறவினர்கள் யாரும் காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மோசடியானது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,

03.10.2024.